# Annual Research Session of Eastern University, Sri Lanka

ARS

2017

# BOOK OF ABSTRACTS

*Nurturing a Conducive Environment for Healthier Future*

12-13 October 2017

Faculty of Health-Care Sciences
Eastern University, Sri Lanka

Prevalence and risk factors for diabetic foot ulcer among diabetic patients attending the medical clinic in Teaching Hospital Batticaloa ........ 53

Prevalence of extended spectrum beta-lactamase (ESBL) producing coliforms among urinary isolates and their antibiotic sensitivity patterns ........ 54

Factors affecting employee retention in the Sri Lankan pharmaceuticals sector: A case study of Kurunegala district ........ 55

Corporate finance practices in Sri Lanka: A survey ........ 56

புராதன மட்டக்களப்பில் சமணம் - தொல்லியற் சான்றுகள் ........ 57

மட்டக்களப்பு – குருக்கள்மடம் வீரமுனை செப்பேடு ........ 58

விவாகரத்துக்களும் அவை சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களும்: மட்டக்களப்பு முஸ்லிம்களை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு ........ 59

Panel of Reviewers – ARS 2017 ........ 60

Authors Index ........ 61

**PP12**

# புராதன மட்டக்களப்பில் சமணம் - தொல்லியற் சான்றுகள்

கௌரி புண்ணியமூர்த்தி[1]

**ஆய்வுச் சுருக்கம்:** இலங்கையில் சமணம் நிலைபெற்றிருந்தமைக்கு மகாவம்சம் முதலான பாளி இலக்கியங்கள் பல்வேறு சான்றுகளைக் குறிப்பிடுகின்றபோதிலும் போதுமானளவு தொல்லியற் சான்றுகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அண்மைக் காலத்தில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் கிடைத்துள்ள கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளுக்குரிய கல்வெட்டுக்கள், தொல்லியற் சின்னங்கள் என்பன சமகாலத்தில் தமிழகத்தில் நிலைபெற்றிருந்தமை போன்றே அவைதீக நெறியான சமணமும் இப்பிராந்தியத்தில் மக்களால் பின்பற்றப்பட்ட நெறியாகக் காணப்பட்டது என்பதை புலப்படுத்துகின்றது. பிராமிக் கல்வெட்டுக்களின் படிகள், நிழற்படங்கள் என்பவற்றை மூலமாகக் கொண்டு அவற்றினை ஆய்விற்குட்படுத்துவதுடன், தெளிவற்றதும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதப்படுகின்ற பெருமளவிலான கல்வெட்டுக்கள் நேரடியான களவாய்விற்கு உட்படுத்தப்பட்டு, பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் பெறப்படவுள்ளன. அத்துடன் தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள், தொல்லியற் சின்னங்கள் என்பவை மேலாய்வுகளின் மூலம் ஆய்வுப் பிரதேசத்தில் கிடைத்துள்ள தொல்லியற் சின்னங்களுடன் ஒப்பிட்டு கருத்தைச் சீரமைக்கின்ற ஒப்பீட்டாய்வு அணுகுமுறையும் பயன்படுத்தப்படுகின்றது. வெல்லாவெளியில் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டொன்றில் சமணப் பெண் துறவி 'குரத்தி' என அழைக்கப்படுகின்றார். மற்றொன்றில் தேவர் படிமங்கள் பற்றிய செய்தி காணப்படுகின்றது. இலங்கையில் சமணப்பள்ளி பற்றிய சாசனக் குறிப்பு இவைதவிர வெறெங்கும் காணப்படவில்லை. மட்டக்களப்பு கோயில்குளத்தில் கிடைத்துள்ள புடைப்புச் சிற்பம் ஆடையலங்காரமின்றி காணப்படுவதால் சமண தீர்த்தங்கரர் என்பது உறுதியாகின்றது. இந்த அடிப்படையில் இச்சிற்பம் திகம்பரப் பிரிவைச் சேர்ந்த சமணர்களால் வழிபடப்பட்ட தீர்த்தங்கரர் உருவமாகவே கொள்ளவேண்டியுள்ளது. இதனடிப்படையில் நோக்குகின்ற போது வெல்லாவெளிக் கல்வெட்டில் மீகுரத்தி என பெண் துறவி குறிப்பிடப்பட்டுள்ளமையானது சுவேதாம்பரர் பிரிவின் கொள்கையை வெளிப்படுத்துகின்றது. ஆயின் மட்டக்களப்பில் கி.பி முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் சமண சமணயத்தின் திகாம்பரர், சுவேதாம்பரர் ஆகிய இரு பிரிவினரும் இருந்துள்ளனர் என்பது புலனாகின்றது. இலக்கியச் சான்றுகள் கிடைக்காத போதிலும் தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் மட்டக்களப்பில் கிறிஸ்தாப்தத்தின் ஆரம்பத்தில் சமண சமயத்தை பின்பற்றுபவர்கள் இருந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

**திறவுச்சொற்கள்:** சமணம், பிராமிக் கல்வெட்டுக்கள், திகம்பரர், சுவேதாம்பரர்

---

[1] வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். *Email: pgowry24@yahoo.com*